# ஆந்தூரியம்

1. அசுவினி, மைசஸ் சிர்கம்ஃபிளக்ஸஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- இளம்குஞ்சுகள் மற்றும் அசுவினிகள் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- இலைகள் மஞ்சளாக மாறி இலைகள் உருக்குலைந்து வளர்ச்சிக் குன்றி காணப்படும்.
- அசுவினியிலிருந்து வெளியேறும் தேன் போன்ற கழிவுப் பொருள் கரும்புகை பூசணத்தை ஏற்படுத்துகிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்

பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.

- மாலத்தியான் 2 மிலி / லிட்டர் தண்ணீர்
- பாஸ்போமிடான் 2மிலி / லிட்டர் தண்ணீர்

2. இலைப்பேன், செட்டினோாப்ஃபோத்ரிப்ஸ் ஆர்சிடி

சேதத்தின் அறிகுறிகள்

- இலையின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- இலைகளில் சுருக்கங்கள் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- 1 லிட்டர் தண்ணீரில் 1 மிலி சிப்ளோஃத்ரின் (அ) 1 மிலி குளோர்பைரிஃபாஸ் கலந்து தெளிக்கவும் (அ) 1 மிலி

டைமீதோயேட் அல்லது பாஸ்போமிடான் 0.5 மிலி கலந்து தெளிக்கவும்.

3. வெள்ளை ஈ, பெமீசியா டபாசி (அ) பெமீசியா ஆந்தூரிகோலா

சேதத்தின் அறிகுறிகள்

- இலையின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்

கட்டுப்படுத்தும் முறைகள்

- இலைச்சுருள் தாக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும்.
- தேவையான அளவு தழைச்சத்து மற்றும் நீர்பாசனம் மேற்கொள்ள வேண்டும்.
- மாற்று உணவுப்பயிரான துத்தி செடியை நீக்க வேண்டும்.
- மஞ்சள் நிற தகரடப்பாக்களின் மீது ஆமணக்கு எண்ணெய் தடவி பயிரின் உயரத்திற்கு குச்சிகளை நட்டு ஹெக்டேருக்கு 15 வீதம் வைத்து கவரப்படும் âச்சிகளை அழிக்கலாம்.டப்பாக்களை வாரத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்து புதிய எண்ணெய் தடவி வைக்கவேண்டும் :
- மீன் எண்ணெய் ரோசின் சோப் [FORS] 2 சதம் அல்லது வேப்பஎண்ணெய் 0.5 சதம் உடன் டீபால் 1மி.லி / லிட்டர் கலந்து தெளிக்கவும்.
- மீதைல் டெமட்டான் 0.25 சதம் அல்லது என்டோசல்ஃபான் 0.7 சதம் உடன் மீன் எண்ணெய் ரோசின் சோப் [FORS] கலந்து தெளிக்கவும்.

4. சிவப்பு சிலநதி, டெட்ராநைக்ஸ் சின்னாபரினஸ்

சேதத்தின் அறிகுறிகள்

- இலைகள் மஞ்சளாக மாறி சுருக்கங்கள் காணப்படும்.
- இலைகள் சுருங்கி பழுப்பாக மாறிவிடும்.
- இலையின் அடிப்பாகத்தில் நூலாம்படையில் பின்னியிருக்கும்.

பூச்சியின் விபரம்

- சிலந்தி சிவப்பாக இருக்கும்
- உருண்டையான வெண்ணிற முட்டைகளை இலையின் அடிப்பரப்பில் இடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

1 லிட்டர் தண்ணீரில் 0.8 மிலி டைக்கோபால் கலந்து தெளிக்கவும்.